2009 ஜூலை 20]

ஆண்டு வழங்கப்படும்; இந்த ஆண்டு வழங்கப்படும்" என்று இந்தச் சட்டமன்றத்திலே உறுதியளித்தார்கள். இப்போது ஏலகிரி மலையிலிருந்து, 50 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ள ஜவ்வாது மலைக்கு வாரத்திற்கு ஒரு முறை மொபைல் வேன்மூலமாக வருகிறார்கள். அந்தப் பகுதி மலைவாழ் மக்கள் தங்களின் துணை வருவாயாக ஆடு, மாடுகளை மேய்த்து அவர்களின் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். கால்நடைகளுக்கு நோய் வந்துவிட்டால், நிச்சயமாக அந்தக் கால்நடைகள் மடிந்துவிடுகின்றன. அதற்கான கருத்துருக்கள் அனைத்தும் நம்முடைய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. எனவே, மலைவாழ் மக்களின் நலன் கருதி, முன்னுரிமை அடிப்படையில், அந்தப் பகுதி மலைவாழ் மக்களுக்கு இந்த ஆண்டே கால்நடை மருத்துவமனையினைக் கட்டித் தர, அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், என்னுடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தக் கட்டடம் கட்டுவதற்கான நிதியைத் தருவதற்கு நானும் தயாராக இருக்கிறேன். எனவே, முன்னுரிமை அடிப்படையில் அதனை வழங்கிட, அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியளித்திட முன்வந்தால், முன்னுரிமை அடிப்படையில் விரைவில் அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

175—

கட்டடம்

***33785—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட, அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம், பம்மல், நீலாங்கரை, வேளச்சேரி ஆகிய நான்கு சார்பதிவாளர் அலுவலகங்கள், தாம்பரம் தொகுதியில் இருக்கின்றன. அதிலே, குறிப்பாக தாம்பரம் அலுவலகம், மிகவும் பழைமையான ஒரு சார்பதிவாளர் அலுவலகம். அதை உடனடியாகக் கட்டித் தர வேண்டும். மீதம் உள்ள மூன்று கட்டடங்களையும் கட்டித் தர வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில், எத்தனை புதிய அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன என்பதையும், தாம்பரத்தில் எத்தனை ஆவணங்கள் பதிவு செய்யப்படுகின்றன என்பதையும், அதற்காக வாடகை எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்பதையும், மேலும் தமிழ்நாட்டில் எத்தனை கட்டடங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்குகின்றன என்பதையும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராஜா, தொடர்பில்லாமல் ஏன் கேட்கிறீர்கள்? மூலக் கேள்வி என்ன? (குறுக்கீடு) மாநிலம் முழுவதுமான விவரங்களை எல்லாம் எதற்காகக் கேட்கிறீர்கள்? தொடர்புள்ளவற்றை மட்டும் கேளுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: அதனைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்தைப்

2009 ஜூலை 20]

பொறுத்தவரையில், 1961 ஆம் ஆண்டு முதல் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆண்டுதோறும் பதிவு செய்யப்படக்கூடிய ஆவணங்களின் எண்ணிக்கை 17,411 ஆகும். இங்கு புதிய அலுவலகம் கட்டுவதைப் பொறுத்தவரையில்—நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆண்டுதோறும் புதிய கட்டடங்களுக்காக நிதியினை ஒதுக்கித் தந்துகொண்டிருக்கின்றார்கள்; தாம்பரம் பகுதியைப் பொறுத்தமட்டில்—சொந்தமான இடம் எதுவும் இல்லாத காரணத்தால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாகவோ அல்லது தானமாகவோ அதற்கான இடங்களைப் பெற்றுத் தருவார்களேயானால், நிச்சயமாக நிதிநிலைக்கேற்ப வருங்காலத்தில் புதிய கட்டடம் கட்டக்கூடிய அளவிற்கு இந்தத் துறை முயற்சிகளை மேற்கொள்ளும்.

முற்பகல் 10-00

அதேபோன்று, மூடப்பட்ட அலுவலகங்கள் எத்தனை திறக்கப்படவிருக்கின்றன என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மூன்றாண்டுக் காலத்தில் இதுவரை 15 புதிய அலுவலகங்களைத் திறப்பதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்த முறை 5 புதிய அலுவலகங்களைத் திறப்பதற்கான அனுமதியும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தந்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தமட்டில், சுமார் 285 தனியார் கட்டடங்களில் பல்வேறு பதிவுத் துறை தலைவர் அலுவலகங்கள் 8-ம், மாவட்ட பதிவாளர் அலுவலங்கள் 32-ம், சார்பதிவாளர் அலுவலகங்கள் 245-ம், ஆக மொத்தம் 285 அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. ஆண்டொன்றுக்கு, 1,26,80,760 ரூபாய் இந்தத் துறை வாடகையாக வழங்கி கொண்டிருக்கின்றது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தாம்பரத்தில் இருக்கின்ற அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட முடியாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது புதிய கட்டடம் கட்ட முடியவில்லையென்று சொன்னாலும், பல வெளிநாட்டு

கம்பெனிகளும், உள்நாட்டு கம்பெனிகளும், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், TATA, BATA, Reliance போன்ற நிறுவனங்கள் எல்லாம் தனியார் கட்டடங்களை வாடகைக்கு எடுத்துதான் இன்றைக்குத் தங்களுடைய தொழிலைச் செய்து கொண்டிருக்கின்றன. Registrar Office-க்குப் பதிவு செய்ய வருகின்றவர்களுக்குத் தற்போது இருக்கின்ற கட்டட வசதி, இட வசதி போதுமானதாக இல்லை. வருகின்றவர்கள் வாகனங்களை நிறுத்துவதற்கான வசதியும் போதுமானதாக இல்லை. அடிக்கடி அலுவலகங்களை மாற்றிக் கொண்டிருக்கிற காரணத்தினால், record-களையும் பராமரிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அலுவலர்கள் பணியாற்றக்கூடிய சூழ்நிலையும் இல்லை. ஆகவே, வாடகைக் கட்டடத்திலே, சிறப்பாக அமைப்பதற்காவது ஏதாவது அரசிடம் திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்தைப் பொறுத்தமட்டில், வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. போதுமான இட வசதியில்லாமல் நெருக்கடியாக இருப்பது உண்மைதான். இருந்தாலும்கூட, அந்தப் பகுதியில் தானமாக யாராவது இடம் தருவதற்கு முன்வந்தால், அதற்கான முயற்சிகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்து, இடத்தைப் பெற்றுத் தருவார்களேயானால், நிச்சயமாக புதிய கட்டடம் அங்கு கட்டப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, புதுச்சத்திரம் ஒன்றியம், தனியார் கட்டடத்திலே இயங்கி கொண்டிருக்கிற சார்பாதிவாளர் அலுவலகத்திற்குப் பொது மக்களுடைய பங்களிப்பாக ஒரு ஏக்கர் நிலம் வாங்கி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில், கட்டடம் கட்டித் தருவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

2009 ஜூலை 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கான இடத்தை, இந்தத் துறைக்குத் தந்திருப்பதாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நிச்சயமாக, நிதி நிலைமையைப் பொறுத்து, முன்னுரிமையின் அடிப்படையில் அந்தப் பகுதியில் புதிய கட்டடம் கட்டுவதற்கு இந்தத் துறை முயற்சிகளை எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

திரு. கோ. அரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கம் ஊராட்சியில் இயங்கிவரும் சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லை. சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான இடமும் ஒதுக்கி, ஊராட்சி மன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றி, அரசுக்கு அனுப்பியுள்ள நிலையில், இதுவரையில் அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, அப்பகுதி மக்களின் நலன் கருதி, பேரம்பாக்கத்தில் சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர, அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் தந்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக நிதிநிலைமையைப் பொறுத்து, முன்னுரிமை அளித்து, அந்த இடத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொள்வோம். இருந்தாலும்கூட, கடந்த மூன்றாண்டுக் காலமாக மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 45 புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதிலே, சுமார் 25 கட்டடங்கள் கட்டப்பட்டு, பயன்பாட்டில் இருக்கின்றன. மீதி

இருக்கக்கூடிய 20 கட்டடங்களில், 14 புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 4 கட்டடங்களுக்கு டெண்டர் விடப்பட்டிருக்கிறது. 2 கட்டடத்திற்கான மாற்று இடத்தைத் தேர்வு செய்யக்கூடிய பணிகளில், இந்தத் துறை ஈடுபட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

176—

குடமுழுக்கு

***33494—திரு. எஸ். இராசசேகரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, திருமணஞ்சேரி அருள்மிகு சுகந்த பரிமளேஸ்வரர் கோயிலைப் புதுப்பித்துக் குடமுழுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, திருமணஞ்சேரி அருள்மிகு சுகந்த பரிமளேஸ்வரர் திருக்கோயிலில் குடமுழுக்கு நடைபெற்று 10 வருடங்கள் மட்டுமே நிறைவடைந்துள்ளதாலும், ஆகம விதிகளின்படி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்கு நடைபெற வேண்டும் என்பதாலும், குடமுழுக்கு நடத்த தற்போது அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

முற்பகல் 10-05

திரு. எஸ். இராசசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 வருடங்கள் ஆகியிருக்கின்றன என்பது உண்மைதான். 12 வருடங்களுக்கு ஒரு தடவை குடமுழுக்கு செய்ய வேண்டும்.